# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## இடைநிலை மனு எண் 11/2017 இன் நிறைவேற்றல் மனு எண் 26/2012

பெயர் : அருள்முருகன் நாள் : 05.01.2023

ம.சா.1 – 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை.

ம.சா.1 – அருள்முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.15</u>

நிறைவேற்றுதல் மனுவை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கு 217/2008 என்ற வழக்கின் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக 4ம் எதிர்மனுதாரர்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான். நான் இந்த மனுவை அசல் வழக்கு எண் 217/2008ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாது என்றும், அதனால் நிறைவேற்றுதல் மனு எண் 26/2012 ஐ தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் இதே நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு எண் 26/2012 இடைநிலை மனு எண் 27/2015 என்ற மனுவை இந்த மனுவில் கோரியுள்ள பரிகாரத்திற்காக தாக்கல் செய்து அது முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். அசல் வழக்கு 49/2009ன் தீர்ப்பின் அடிப்படையில் இந்த நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதுதான் எனது தரப்பு வாதம் என்றால், சரிதான்.

2) அசல் வழக்கு எண் 49/2009 என்ற வழக்கை 1ம் எதிர்மனுதாரர் மணிவாசகம் என்பவர் பாலசுப்ரமணியம், பாலு, கணபதி, சின்னராஜ் ஆகியோர்கள்மீது தாக்கல் செய்திருந்தார்கள் என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 49/2009 வழக்கின் தீர்ப்பிற்கு பிறகுதான் 23.06.2009ம் தேதியில் நிறைவேற்று மனுவில் கண்டுள்ள சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 49/2009 வழக்கில் வழங்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **CRP No**.2358/2014ல் 30.04.2019ல் வழங்கப்பட்ட உத்தரவின்படி மேற்படி அசல் வழக்கு எண் 49/2009 வழக்கானது இந்த நீதிமன்றத்தில் மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான். நிறைவேற்று மனுவில் கண்டுள்ள சொத்துக்களை எனது தகப்பனார் 06.06.2011ம் தேதியில் எனது பெயருக்கு தானசெட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார்.

3) நான் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கானது அசல் வழக்கு எண் 250/2012ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான். 11.03.2008ம் தேதியில்

4 ம் எதிர்மனுதாரர், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு மனு சொத்தை கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார் என்றால், ஒப்பந்த ஆவணம் ஒரு பொய் ஆவணமாகும். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கு எண் 217/2008 வழக்கை 4 ம் எதிர்மனுதாரர்மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால், சரிதான். அந்த வழக்கில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ஒரு மோசடியாக தீர்ப்பை பெற்றிருக்கிறார்கள். மேற்படி தீர்ப்பை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் சார்பதிவாளர் அலுவலகம், மகுடஞ்சாவடியில் பதிவுறு செய்துள்ளார்கள் என்று சொன்னால், சரிதான். அசல் வழக்கு எண் 217/2008 வழக்கின் தீர்ப்பு குறித்த விபரங்கள் எப்போது தெரிய வந்தது என்றால், மணிவாசகம் சொல்லித்தான் தெரியும்.

4) எனது தகப்பனார் சொத்தை வாங்கும்பொழுது வில்லங்கம் பார்த்துதான் வாங்கினார் என்றால், சரிதான். எனது தகப்பனார் 23.06.2009 ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால், சரிதான். கிரையம் பெற்ற தேதியிலேயே எனது தகப்பனாருக்கு அசல் வழக்கு எண் 217/2008 வழக்கின் தீர்ப்பு குறித்து விபரம் தெரியும் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. மணிவாசகத்திற்கு எப்போது அசல் வழக்கு எண் 217/2008 வழக்கின் தீர்ப்பு விபரம் தெரிய வந்தது என்பது குறித்தும், எனக்கு எதுவும் தெரியாது. அசல் வழக்கு 217/2008 வழக்கின் தீர்ப்பு செல்லாது என்றோ, 11.03.2008 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் செல்லாது என்றோ வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ம.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.45</u>

ஒப்பம் /அருள்முருகன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.